# உடல்நல காப்பு பிரச்சார முகாமினை துவக்கியது ஒன்ஹப்

சென்னை, செப். 13

1450 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட ஒருங்கிணைந்த தொழில் நகரமைப்பான ஒன்ஹப் சென்னையானது, சென்னை பழைய மகாபலிபுரம் சாலையில் உருவாகி வரும் தொழில் நகரமைப்பைச் சுற்றியுள்ள அண்டைப் பகுதியில் ஒரு சுகாதார (உடல் நல) மற்றும் நலப் பணியை தொடங்கியுள்ளது.

ஒன்ஹப் சென்னையின் ஒரு சமுதாயத் தொண்டு முயற்சியான ஹெல்த்ஹப் என்பது குன்னப்பட்டு, பையனூர், ஆமூர் மற்றும் பஞ்சன்திருத்தி ஆகிய நான்கு கிராமங்களுக்கு முதனிலை பரிசோதனைகளை நீட்டிக்கும். ஓராண்டு வரை நடக்கவுள்ள இந்த முகாமில் இலவசமாக தரமான மருத்துவ




சிகிச்சையை பெறுவதன் மூலம் 7000க்கும் மேற்பட்ட கிராம வாசிகள் பயனடைவார்கள். முறைப்படி கிராமங்களில் நடைபெறும் இந்த வாராந்திர முகாம்களில் டாக்டர்கள் ஆய்வு செய்து, நோய் ஏதும் இருக்குமானால் கண்டறிந்து அவற்றிற்கு தேவையான சிகிச்சையை பரிந்துரை செய்வார்கள்.

ஆசென்டாஸ் இந்தியா ஆபரேசன்ஸ், தலைமை செயல் அதிகாரி சீயூ நியாப் மற்றும் இயக்குநர் ரமேஷ் அவதானி ஆதரவின்பேரில், நாடாளு மன்ற உறுப்பினர் கே. மரகதம், சட்டமன்ற உறுப்பினர் கே. மனோகரன் மற்றும் நான்கு கிராமங்களின் தலைவர்கள் முன்னிலையில், ஒன்ஹப் சென்னை தொழில் நகரமைப்பு உருவாகிவரும் இடத்தில் 2014 செப்டம்பர் 10 அன்று ஹெல்த் ஹப் என்ற சுகாதாரத் தொண்டு முயற்சி தொடங்கப்பட்டது.

ஒன்ஹப் சென்னை பொது மேலாளர் டாமினிக் லியோங் தொடக்க நிகழ்ச்சியில் பேசுகையில், 'நாங்கள் செயல்படக் கூடிய இடத்தில் உள்ள சமுதாய மக்களுக்கு சேவையாற்றுவது என்பது எப்போதும் எங்களுடைய கடமை முயற்சியாக இருக்கும். இந்த உடல் நலகாப்பு முயற்சி மூலம், எங்களைச் சுற்றியுள்ள சமுதாய மக்களின் மருத்துவத் தேவைகள் நிறைவேற்றப்படும் என்பதில் நாங்கள் பெரு மகிழ்ச்சியடைகிறோம்' என்றார்.